

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பூங்கா அமைப்பதற்கு மலர்ச் செடிகளை இன்று (01.08.2016) நட்டு வைத்தார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு. இராஜேந்திரன், திரு. நிஜாமுதீன், திரு. பத்ஹீ முஹம்மது நசீர் ஆகியோர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 488/2016 நாள்: 01.08.2016

**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பூங்கா அமைத்தல் மற்றும் பசுமையாக்கல் பணி தொடங்கிவைப்பு**

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு தினமும் பல்வேறு அலுவல்கள் காரணமாக வந்து செல்லும் மக்களின் வசதிக்காக அலுவலக வளாகத்தில் பூங்கா அமைத்து அழகு படுத்தி பசுமையாக்கும் பணிகள் மற்றும் வாகனப் போக்குவரத்து ஒழுங்குப்படுத்துதல், இருக்கை வசதிகள் மேம்படுத்துதல் போன்றப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு மண் பரப்புதல் போன்ற அடிப்படைப்பணிகள் நிறைவுப் பெற்று மலர்ச் செடிகள் நடும் பணி இன்று (01.08.2016) தொடங்கியது. அதனை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு.சஜ்ஜன் சிங் சவான் இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்ததார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நோமுக உதவியாளர் ( பொது) திரு. பொ. ராஜேந்திரன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. எம் நிஜாமுதீன் இ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு. சா.பத்ஹீ முகம்மது நசீர்இ தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. அசோக் மேக்ரின்இ கனிம வளத்துறை உதவி இயக்குநர் திரு. குருசாமி இ உசூர் மேலாளர் திரு. எம்.வி. சஜித்இ வேளாண்மை அலுவலர் திரு.த. ஆதிநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை)

நாகர்கோவில்

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**